Godowns at Tindivanam

* 345 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether any instance of theft of huge stocks of paddy from Government godowns at Tindivanam about the 17th April, 1973, has come to the notice of the Government;

(b) if so, the details thereof; and

(c) the action taken thereon?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) திண்டிவனம், நெல் அரைவை முகவர் திரு. டி. ஆர். ஜெகதீசனது கிடங்கை 1973, மார்ச் திங்களில் பார்வையிட்டதில் 4647 நெல் மூட்டைகள் குறைந்துள்ளது காணப்பட்டது. குறைந்துள்ள இந்த 4647 நெல் மூட்டைகளின் மதிப்பு ரூ. 1.90 லட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

(உ) ஆலை உரிமையாளர் திரு. டி. ஆர். ஜெகதீசன் 28–2–1973 அன்று காலமானார். இதுவரையில் ரூ. 15,000 திருப்பி வசூலிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் ஆலை உரிமையாளருக்குச் சொந்தமான இயங்காச் சொத்துக்களைக் கைப்பற்ற வரி வசூல் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை, அவரது மைத்துனர் திரு. டி. ஆர். சோமசுந்தரம் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட சிவில் வழக்கில், கடலூர் துணை நீதி மன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடையாணையின் விளைவாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வழக்கு இன்னும் விசாரணையில் உள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, கிட்டங்கியின் பொறுப்பாளர் இதற்கு உடந்தையாக இருந்ததாகக் கூறப்படுகிறது. இதுவரையில் எத்தனை பேர் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : திண்டிவனத்திலுள்ள சிறப்பு வட்டாட்சியர் (கொள்முதல்), வட்ட வழங்கல் அலுவலர், தனி வருவாய் ஆய்வாளர் (உணவு வழங்கல்) ஆகியோர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

1974 மார்ச் 9]

திருமதி த. ந. அனந்தநாயகி : அவர்களால் ஒரு லட்சம் ரூபாய் நஷ்டமாகியிருப்பதாகச் சொன்னார்கள். நஷ்டத்தைச் சரிக்கட்ட அவர்களிடத்தில் சொத்து இருக்கிறதோடு அப்படிச் சொத்துக்கள் இருந்தால் அதைப் பறிமுதல் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அவர்களுடைய சொத்துக்கள் ஏலத்தில் கொண்டு வரப்படுமென்று அறிவிப்பு செய்யப்பட்டது. அவர்களுக்கு ஒரு மில் இருக்கிறது. மற்ற சொத்துக்கள் எல்லாம் சேர்ந்து கிட்டத்தட்ட 1 லட்சம் ரூபாய்க்கு மேல் வரும். மேற்சொன்ன ஏல அறிவிப்பின்மேல், மில் சொந்தக்காரரின் மைத்துனரால் சொத்துக்கள் ஏற்கனவே தனக்கு விற்கப்பட்டுவிட்டதாகவும், ஆகையால் அவற்றை ஏலம் விடக்கூடாது என்றும் வழக்கு தொடரப்பட்டு, இப்போது கடலூர் சப் கோர்ட்டில் அந்த வழக்கு நடந்துகொண்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, கிட்டத்தட்ட 4,500 மூட்டைகள் காணமல் போயிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது ஒரு நாளில் போனதா அல்லது பல நாட்களாக நடந்து இருக்கிறதா? அது சம்பந்தமாக மேல்மட்ட அதிகாரிகள் சோதனைகள் நடத்துகிறார்களா? இப்போது சஸ்பெண்டு செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டார்கள். மேற்கொண்டு வேறு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இது மார்ச் 1973-ல் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு முன்னாலே நான் லெவி நெல்லை வாங்கி குடோனில் வைத்து இருந்தோம். அரைவைக்கு எடுக்கிறபோது இப்படி நடைபெற்று இருக்கிறது. அங்கேயிருக்கிற அதிகாரிகள் கவனக்குறைவாக இருந்ததால் தான் இது நடைபெற்று இருக்கிறது என்று கருதி, மூன்று அதிகாரிகள் பேரில் நடவடிக்கை எடுத்து இருக்கிறோம்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்த நெல் மிஷின் சொந்தக்காரர்கள் நெல்லில் கையாடல் செய்த பின்னாலே அரசு நடவடிக்கை எடுத்தால், அவர்கள் உயர் நீதி மன்றம் சென்று விடுகிறார்கள். அவர்கள் ரூ. 5,000, ரூ. 10,000 என்று சொல்லி அரசுப் பணத்தையே வைத்து அரசுக்கு எதிராக வழக்கைத் தொடுக்

கிறார்கள். ஆகவே, இதற்கென தனியாக சட்ட இலாகா அமைத்து, தனியாக இந்த வழக்குகளை நடத்தி, உடனடியாக அந்த வழக்குகளைத் தீர்ப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இதற்காகத் தனியாக ஒரு சட்ட இலாகா அமைக்க முடியுமா முடியாதா என்ற சட்டம் எனக்குத் தெரியாது. ஆனால் இதற்காகத் தனியாக கவனம் செலுத்தப்படுகிறது என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், தென்னாற்காடு மாவட்டத்தில் முதலில் வளவனூரில் நடந்தது. பின்னால் திண்டிவனத்தில் நடந்து இருக்கிறது. இப்படிப் பல்லாயிரக்கணக்கான மூட்டைகள் தென்னாற்காடு மாவட்டத்தில்தான் அதிகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. அதற்குப் பின்னால் தென்னாற்காடு மாவட்டத்தில் எங்கேனும் மூட்டைகள் காணாமல் போய் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இது நடந்தது ஓராண்டுக்கு முன்னே. அதற்குப் பிறகு நல்ல முறையில் கவனம் செலுத்தி வருகிறோம். முறையையும் மாற்றி இருக்கிறோம். முன்னாலே டிபாசிட் வாங்கும் தொகை 15,000 என்று இருந்தது. அதை 10,000 என்று பிறகு வைத்தார்கள். இப்போது அது 25,000 என்று டிபாசிட் வாங்குகிறோம். ரூ. 50,000 மதிப்புள்ள சொத்து ஜாமீனாகக் கொடுக்கவேண்டும். ஒரு மில்லுக்குச் சொந்தக்காரராக இருக்கவேண்டும், அல்லது ஒரு மில்லை வாடகைக்கு எடுத்து இருக்கவேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். ரீஜினல் மேனேஜர்கள் போட்டு இருக்கிறோம். டெக்னிகல் அசிஸ்டென்ட் போட்டு, அந்தச் சாவியை இரண்டு பேரும் கண்காணிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இப்போது நிர்வாக அமைப்பில் மாறுதல் இருப்பதால், உடனடியாக வாரத்திற்கு ஒரு முறை அது கண்காணிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, அதற்குப்பிறகு சரியாக நடந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 346 . . .

திரு. முனு ஆதி: நான் வெகு நேரமாகக் கையைத் தூக்கிக் கொண்டு இருக்கிறேன். நீங்கள் பார்க்கவில்லையே. ஒரு முக்கியமான விஷயம் தெரிந்து கொள்ளவேண்டும்.

1974 மார்ச் 9]

தலைவரவர்களே, அந்த உரிமையாளர் இறந்து விட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உயிரோடு இருக்கும் போது அவர்களிடமிருந்து ஏதாவது எழுதி வாங்கப்பட்டதா? அவர்களுடைய சொந்தக்காரர்கள் யார் என்று கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? அவர்களிடமிருந்து ஏதாவது எழுதி வாங்கியிருந்தால் அந்த அறிக்கையைப்பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, எல்லாவற்றையும் வழக்குக்காகத் தயார் செய்து கொடுத்து இருக்கிறோம். அவர் இறந்த பிறகுதான் இது கண்டுபிடிக்கப்பட்டது. ஆகவே, அவர்களுடைய சொந்தக்காரர்கள்—சகோதரர், அவரது மைத்துனர்—ஆகியோர் அந்த வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள்.

(முற்பகல் 10.00)

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்த வழக்கில் உரிமையாளர் இறந்துவிட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர் இறந்தது பற்றி ஏதாவது சோதனை நடைபெற்றுள்ளதா? தற்கொலையால் அவர் இறந்தாரா என்று அரசாங்கம் விசாரணை நடத்தியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அந்த இலாக்கா என்னிடம் இல்லை.

Foodgrains seized at Kancheepuram

*316 Q—Thiru N. Dennis: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether it is a fact that a large quantity of foodgrains was seized in Kancheepuram in Chingleput district around December, 1972; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) உணவுப் பொருள்கள் குறித்த குற்றங்களைப் புலனாய்வு செய்வதற்கான காவல்துறைப் பிரிவைச் சேர்ந்த செங்கற்பட்டு, காவல்துறை இன்ஸ்பெக்டர், 22—12—1972 அன்று காஞ்சீபுரத்தில்